027

074/DM/24

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

### பகுதி – I

**எவையேனும் ஆறு வினாவிற்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. பாசவுர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர்-சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

2. மொழி எத்தனை வகைப்படும் ? அவை யாவை?.

3. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
– இக்குறளில் பயின்று வந்துள்ள அணியையும் அணி இலக்கணத்தையும் குறிப்பிடுக.

4. 'மன்னும் சிலம்பே மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!' - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

5. நான்கனுக்கு இலக்கணக் குறிப்பு தருக :

(அ) நன்மொழி

(ஆ) வண்ணமும் சுண்ணமும்

(இ) ஆடுக

(ஈ) ஊழ்ஊழ்

6. நான்கனுக்கு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

(அ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

(ஆ) மழைமுகம் காணாப் பயிர்போல

(இ) முன்னுக்குப் பின்

(ஈ) கண்ணினைக் காக்கும் இமை போல

[Turn over

7. நான்கனுக்கு பொருள் தருக :

(அ) விரிச்சி

(ஆ) கடும்பு

(இ) முனிவு

(ஈ) விசும்பு

8. நான்கினைப் பிரித்து எழுதுக.

(அ) வேண்டியதில்லை

(ஆ) வழுவமைதி

(இ) காணொலி

(ஈ) மணற்கேணி

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாவிற்கு விடை தருக.** **(6 × 6 = 36)**

1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

2. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' – இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

3. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

4. பின்வரும் ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.

(அ) கோயம்புத்தூர்

(ஆ) திருநெல்வேலி

(இ) மயிலாப்பூர்

(ஈ) திருச்சிராப்பள்ளி

(உ) மன்னார்குடி

(ஊ) சைதாப்பேட்டை

5. ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என அசோகமித்திரன் கூறுகிறார் - இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

6. 'சிறுதாம்பு' - எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை அடிபிறழாமல் எழுதுக.

7. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

## பகுதி – III

**எவையேனும் <u>நான்கு வினாவிற்கு</u> விடை தருக.** **(4 × 10 = 40)**

1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

3. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

4. கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

5. உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.